# ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு

## ஊவா மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விமாணி பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பு IIஆம் தரத்திற்கு ஆட்சேர்த்தல் - 2024

ஊவா மாகாண சபையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஊவா மாகாணத்தில் நிரந்தரமாக வதியும் கல்விமாணி பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகள்: 1885/38ஆம் இலக்க 2014-10-23ஆம் திகதிய இலங்கை ஆசிரியர் சேவை சட்டவாக்க கோவையின் 7.2.2.1 அத்தியாயத்தின் 6ஆம் குறிப்பின் பிரகாரம் விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும் க.பொ.த (சா/தர) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி பாடத்தில் சித்தியடைந்திருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் செல்லுபடியாகும் வகையில் விண்ணப்பிக்கும் பாடத்திற்கு இயைபாக விபரமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கல்விமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நாளில் அதாவது 2024-03-15ஆம் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2023-03-15.

விண்ணப்பங்களைக் கோரும் விபரமான அறிவித்தல், பாட வெற்றிட பட்டியல் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவங்களை ஊவா மாகாண சபையின் psc.up.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்: 055-2231460

**(எம்.எச். ஜீவந்த ஹேரத்,**
**செயலாளர்,**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு.**

**2024-03-04ஆம் திகதி,**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,**
**இல. 14/4, பிலிபொத்தகம வீதி, பிங்அராவ, பதுளை.**

tamilguru.lk